Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 108 | உள்ளூர் - 18.04.2026 | சனி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 108 | வெளியூர் - 19.04.2026 | ஞாயிறு | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

பஞ்சாப் & சிந்து வங்கி 27 காலியிடங்கள்!

மாமியார் மருமகளுக்குள் அடிக்கடி சண்டையா ?

கோடை கால சிறப்பு ரெயில்கள் இயக்கம்!

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!

## ஏப்.22-க்குள் உடன்பாடு எட்டப்படாவிட்டால் ஈரான் போர் நிறுத்தம் முடிவுக்கு வரும்: ட்ரம்ப்!



மேரிலாந்து, ஏப். 18–

எதிர்வரும் 22–ம் தேதிக்குள் உடன்பாடு எட்டப்படவில்லை என்றால் ஈரான் உடனான போர் நிறுத்தம் முடிவுக்கு வரக்கூடும் என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் – லெபனான் போர் நிறுத்தம் அமலான காரணத்தால் ஹார்முஸ் ஜலசந்தியை கப்பல் போக்குவரத்துக்கு திறப்பதாக ஈரான் தெரிவித்துள்ளது. இருப்பினும் ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்கா முடக்க கூடாது என ஈரான் கூறியுள்ளது. அமெரிக்கா – ஈரான் இடையே விரைவில் இரண்டாவது கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வரும் 22–ம் தேதியுடன் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான இடைக்கால போர் நிறுத்தம் முடிவுக்கு வருகிறது. இந்நிலையில், 'போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுமா?' என செய்தியாளர் சந்திப்பில் முன்வைக்கப்பட்ட கேள்விக்கு ட்ரம்ப் பதில் அளித்துள்ளார்.

வரும் புதன்கிழமைக்குள் (ஏப்.22) ஈரான் உடனான பேச்சுவார்த்தையில் சுமுக உடன்பாடு எட்டப்பட்டு, ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும். அப்படி நடக்காத பட்சத்தில் இந்த இடைக்கால போர் நிறுத்தம் முடிவுக்கு வரும். மீண்டும் குண்டுகளை வீச வேண்டி இருக்கும். போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட வாய்ப்பில்லை என ட்ரம்ப் தெரிவித்தார்.

அதே நேரத்தில் ஈரான் உடனான திரை மறைவு பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் இருப்பதாகவும், விரைவில் நல்ல செய்தி வரும் என்றும் அமெரிக்க அரசு தரப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம்!



புதுடெல்லி, ஏப். 18–

டெல்லியில் இன்று ஏப். 18–ல் மத்திய அமைச்சரவைக் கூட்டம் கூடுகிறது. பிரதமர் மோடி தலைமையில் நடைபெறும் இந்த கேபினட் கூட்டத்தில் முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்படும் என்று தெரிகிறது. காலை 11.30 மணிக்கு கேபினட் கூட்டம் நடைபெற உள்ளது. இதில் உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்டோர் கலந்து கொள்கிறார்கள்.

## பாராளுமன்றம் ஒத்திவைப்பு!



புதுடெல்லி, ஏப். 18–

நாடாளுமன்றம், சட்டசபைகளில் மகளிருக்கு 33 சதவீதம் வழங்கும் இட ஒதுக்கீடு மசோதா, தொகுதி மறுவரையறை மசோதா உள்ளிட்டவற்றை நிரப்புவதற்காக நாடாளுமன்றத்தின் சிறப்புக்கூட்டம் கடந்த 16 ஆம் தேதி கூடியது. நாடாளுமன்றத்தின் முதல் நாளே இந்த மசோதாக்கல் தாக்கல் செய்யப்பட்டது.

அன்றைய தினம் நள்ளிரவு வரை விவாதம் நடைபெற்ற நிலையில், நேற்று மாலை மசோதாக்கள் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த மசோதாக்களை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அவசியம் என்பதால், மசோதாக்களை எதிர்க்கட்சிகள் முறியடித்தன. இந்த நிலையில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

## கோவை, திருப்பூரில் மு.க. ஸ்டாலினுடன் தேஜஸ்வி யாதவ் பிரசாரம்!





புதுடெல்லி, ஏப். 18–

தமிழக அரசின் பதவிக்காலம் மே மாதம் 10–ந்தேதியுடன் நிறைவடைகிறது. இதனை தொடர்ந்து, தமிழக சட்டசபைக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது. இதன்படி, ஏப்ரல் 23–ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4–ந்தேதி நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

இதில், ஆளும் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்து தமிழகத்தில், இந்தியா கூட்டணியை சேர்ந்த தலைவர்களும் பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர். இதன்படி, கோவை, திருப்பூரில் முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலினுடன் இணைந்து ராஷ்டீரிய ஜனதா தள கட்சியின் தலைவர் தேஜஸ்வி யாதவ் இன்று பிரசாரம் மேற்கொள்கிறார்.

அவர் மதசார்பற்ற முன்னேற்ற கூட்டணிக்கு ஆதரவு கேட்டு பிரசாரம் செய்கிறார். திருச்சி மாவட்டத்தில் துறையூர் நகரில் இன்று மாலை நடைபெறும் கூட்டமொன்றில் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி பங்கேற்கிறார். இதற்காக, சென்னையில் இருந்து திருச்சி சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தரும் அவர், பின்னர் ஹெலிகாப்டரில் துறையூர் செல்கிறார்.

இதேபோன்று, வருகிற 20, 21 ஆகிய நாட்களில் ஆம் ஆத்மியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் டெல்லி முன்னாள் முதல்–மந்திரியான கெஜ்ரிவால் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார். அப்போது, முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் மீண்டும் முதல்–அமைச்சராவதற்காக வாக்கு சேகரிப்பில் ஈடுபட உள்ளார்.

அந்த 2 நாட்களில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, தி.மு.க. தலைமைக்கு அவர் ஆதரவு கேட்கிறார். பல்வேறு பேரணிகளிலும் பங்கேற்க உள்ளார். அப்போது, தி.மு.க. அரசின் நிர்வாகம், நல திட்டங்கள் ஆகியவற்றை குறிப்பிட்டு பிரசாரத்தில் ஈடுபடுகிறார். டெல்லி ஆம் ஆத்மி தலைமை வட்டாரங்கள் இதனை தெரிவித்துள்ளன. இதனால், அரசியல் பிரசாரத்தில் சூடு பிடித்துள்ளது.

## திருப்பூர்: முதல்வர் ஸ்டாலின் பனியன் நிறுவனத்தில் தொழிலாளர்களுடன் கலந்துரையாடல்!



திருப்பூர், ஏப். 18–

முதல்வர் மு.க.ஸ்டாலின் திருப்பூர் ஆஷர் நகர் பகுதியில் உள்ள தனியார் பனியன் நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுடன் சனிக்கிழமை கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை இரவு தேர்தல் பிரசாரத்தை முடித்து விட்டு திருப்பூர் வந்தவர் உறவினர் வீட்டில் தங்கினார். அதைத்தொடர்ந்து சனிக்கிழமை காலை திருப்பூரில் நஞ்சப்பா மேனிலைப்பள்ளி மைதானத்தில் நடைப்பயிற்சி மேற்கொண்டு வாக்கு சேகரித்தார். தொடர்ந்து மாலையில் திருப்பூர் பாண்டியன் நகரில் நடைபெறும் பொது க்கூட்டத்தில் பங்கேற்று வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி ஆதரவு திரட்டுகிறார். இந்த நிலையில், திருப்பூர் பாண்டியன் நகர் பகுதியில் திருப்பூர் ஆஷர் நகர் பகுதியில் உள்ள அலமேலு இன்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸில் உள்ள டோரம் கிரியேட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற பனியன் நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

அதைத்தொடர்ந்து திருப்பூர் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சியினருடன் தொகுதி நிலவரம் குறித்த ஆலோசனையில் ஈடுபடுகிறார்.

மாலை பிரசாரத்திற்கு பின்னர் திருப்பூரில் இருந்து சாலை மார்க்கமாக மேட்டுப்பாளையம் சென்று அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்கிறார்.

## தீவிரமாகும் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகள்

# மத்திய கிழக்கில் குவியும் போர் கப்பல்கள்...

## டிரம்பின் மாஸ்டர் பிளான்!!







ஈரான், ஏப். 18–

ஈரான் – அமெரிக்கா பேச்சுவார்த்தையானது இரண்டாம் கட்டத்தை எட்டியுள்ளது. 2–ம் கட்ட பேச்சுவார்த்தை வரும் 20–ஆம் தேதி நடைபெறும் என்று கூறப்படுகிறது. இந்நிலையில், அமெரிக்கா தனது மிகவும் வலிமையான விமானம் தாங்கி கப்பல்களில் ஒன்றான யு.எஸ்.எஸ் ஜெரால்ட் ஆர். போர்டை (USS Gerald R. Ford) மீண்டும் மத்திய கிழக்கு பகுதிக்கு அனுப்பியுள்ளதாக அசோசியேட் பிரஸ் (Asso–ciated Press) தெரிவித்துள்ளது. கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதியில் இயங்கி வந்த இந்த விமானம் தாங்கி கப்பல், தற்போது சூயஸ் கால்வாய் வழியாக செங்கடலுக்குள் நுழைந்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக அந்த செய்தி நிறுவனம் மேற்கோள் காட்டியுள்ளது. இக்கப்பலுடன் யு.எஸ்.எஸ் மகான் (USS Mahan) மற்றும் யு.எஸ்.எஸ் வின்ஸ்டன் எஸ் சர்சில் (USS Winston S. Churchill) ஆகிய இரண்டு போர்க்கப்பல்களும் உடன் சென்றுள்ளது.

சலவை பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக, பழுதுபார்ப்பதற்காக துறைமுகத்திற்கு திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, இந்த விமானம் தாங்கி கப்பல் மத்திய தரைக்கடல் பகுதியில் ஒரு மாதத்திற்கும் மேலாக செலவிட்ட பிறகு இந்த இடமாற்றம் நிகழ்ந்துள்ளது. என்னதான் பின்னடைவு இருந்தாலும் வியட்நாம் போருக்குப் பிறகு அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல்களில் மிக நீண்ட காலம் பணியில் இருந்ததற்கான சாதனையை ஃபோர்டு சமீபத்தில் படைத்துள்ளது.

இதன் வருகையின் மூலம், தற்போது இப்பிராந்தியத்தில் இரண்டு அமெரிக்க விமானம் தாங்கி கப்பல்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. யு.எஸ்.எஸ் ஆபிரகாம் லிங்கன் (USS Abraham Lincoln) தற்போது அரபிக்கடல் பகுதியில் பணியில் ஈடுபட்டுள்ளது. அதேவேளையில், மூன்றாவது விமானம் தாங்கி கப்பலான யு.எஸ்.எஸ் ஜார்ஜ் ஹெச்.டபிள்யூ. புஷ் (USS George H. W. Bush) கப்பலும் இந்தப் பகுதியை நோக்கி வந்து கொண்டிருப்பதாகவும், அது தற்போது தென்னாப்பிரிக்கக் கடற்கரைக்கு அப்பால் இருப்பதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

அதிகரித்து வரும் இந்த கடற்படை இருப்பு, அந்த பிராந்தியத்தில் அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கைகளின் தீவிரத்தை வெளிப்படுத்துகிறது. இருப்பினும், இந்த பணி குறித்த கூடுதல் விவரங்களை அதிகாரிகள் வழங்கவில்லை.

## டெல்லியை வீழ்த்தியது தமிழ்நாடு; முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின்!




டெல்லி, ஏப். 18–

டெல்லியை வீழ்த்தியது தமிழ்நாடு என்று தமிழக முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், டெல்லியை வீழ்த்தியது தமிழ்நாடு! டெல்லியின் ஆணவத்தையும் – ஆணவத்துக்குத் துணை போகும் அடிமைகளையும் ஏப்ரல் 23 அன்று ஒருசேர வீழ்த்துவோம்! இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## தொடர் ரத்தாகும் விஜயின் பிரச்சாரங்கள்!




தமிழகத்தில் ஒட்டுப்பதிவு நெருங்க நெருங்க, தலைவர்களின் பிரசாரத்தில் அனல் பறக்கிறது. எந்த தொகுதியும் விடுபட்டு விடக்கூடாது என பார்த்து பார்த்து பிரசார உத்திகளை வகுக்கின்றனர். ஆனால் முதன்முதலாக தேர்தலில் போட்டியிடும் விஜய், தனது கட்சியின் முக்கிய தலைவர்களின் தொகுதிகளில் மட்டுமே கவனம் செலுத்தி பிரசாரம் செய்கிறார். மற்ற வேட்பாளர்களை எல்லாம் "அம்போ" என விட்டுவிட்டார்.

ஏற்கனவே, திடீர் திடீரென பிரசாரத்தை ரத்து செய்துவிடுகிறார் என விஜய் மீது ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. போலீஸ் அனுமதி கிடைக்காவிட்டால், அனுமதி கிடைக்கவில்லை. அதனால் பிரசாரம் செய்யவில்லை" என கூப்பாடு போடும் விஜய், அனுமதி கிடைத்தால் அதை ரத்து செய்துவிட்டு வீட்டுக்கு திரும்பி விடுகிறார்" என்று அவரது கட்சியினரே புலம்புகின்றனர்.

6 மணிக்கு மேல் ஆட்டோ ஓடாது' என்கிற வடிவேலுவின் காமெடி பாணியில் 6 மணிக்கு மேல் பிரசாரம் செய்ய மறுக்கிறார். வெளி மாவட்டங்களில் பிரசாரம் செய்தால் கூட 6 மணிக்கு மேல் அந்த ஊரில் தங்காமல் தனி விமானத்தில் பனையூருக்கு வந்து விடுகிறார். தமிழகத்தில் சென்னை, காரைக்குடி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சி, கோவை வழியே திருப்பூர் உள்ளிட்ட முக்கிய இடங்களிலும், புதுச்சேரியில் ஒருநாளும் என இதுவரை 6 நாட்கள் ரோடு ஷோ மற்றும் பிரசாரங்களில் விஜய் ஈடுபட்டுள்ளார். இவற்றில் தனக்கான பெரம்பூர், திருச்சி கிழக்கு தொகுதிகளில் 2 நாட்கள், புதுச்சேரியில் 1 நாள் போக மீதமுள்ள 3 நாட்கள் மட்டுமே மற்ற வேட்பாளர்களுக்கு பிரசாரம் செய்துள்ளார். அதிலும் அவர் பிரசாரம் செய்த வேட்பாளர்கள் கட்சியில் முக்கிய பொறுப்பில் உள்ள நிர்வாகிகள்.

* பெரம்பூர் – விஜய் (கட்சி தலைவர்), மார்ச் 30
* கொளத்தூர் –விஎஸ் பாபு (கட்சி அட்மின்), மார்ச் 30
* வில்லிவாக்கம் – ஆதவ் அர்ஜூனா (தேர்தல் பிரிவு பொதுச்செயலாளர்), மார்ச் 30 (ரத்து)
* திருச்சி கிழக்கு – விஜய் (கட்சி தலைவர்), ஏப்., 2
* காரைக்குடி – டிகே பிரபு (மாவட்ட செயலாளர்), ஏப்., 10
* கன்னியாகுமரி – மாதவன் (மாவட்ட செயலாளர்), ஏப்., 12
* தூத்துக்குடி – ஸ்ரீநாத் (விஜயின் நண்பர், கட்சி அட்மின்), ஏப்., 12
* திருப்பூர் தெற்கு – பாலமுருகன் (மாவட்ட செயலாளர்) ஏப்.14
* எழும்பூர் – ராஜ்மோகன் (துணைப் பொதுச் செயலாளர்), ஏப்., 15
* ஆயிரம் விளக்கு – ஜேசிடி பிரபாகர் (கட்சி அட்மின்), ஏப்., 15
* தி.நகர் – புஸ்ஸி ஆனந்த் (பொதுச் செயலாளர்), ஏப்., 15.

ஆக, இவர்கள் எல்லோருமே கட்சி பொறுப்பில் இருப்பவர்கள். மற்ற தொகுதிகளில் உள்ள சாதாரண பின்னணி உள்ள வேட்பாளர்கள், நாங்கள் என்ன பாவம் செய்தோம். எங்கள் தொகுதிக்கு விஜய் எப்போ வருவார்" என கட்சி அலுவலகத்திற்கு போனை போட்டு கேட்டபடி காத்திருக்கின்றனர். என்ன நடக்குமோ தெரியவில்லை.

## சி.பி.எஸ்.இ 12 ஆம் வகுப்பு ரிசல்ட் 2026: ஏப்ரல் இறுதியில் வெளியீடு?

2026–ஆம் ஆண்டு சி.பி.எஸ்.இ 12–ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் ஏப்ரல் இறுதியில் வெளியாக வாய்ப்புள்ள நிலையில், புதிய டிஜிட்டல் மதிப்பீட்டு முறையால் முன்னதாகவே முடிவுகள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 18.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 05-ம் தேதி

# இந்தியாவில் எல்பிஜி சிலிண்டர் விலை குறையுமா?



இந்தியா தனது எல்பிஜி தேவையின் பெரும்பகுதியை இறக்குமதி மூலமாகவே பூர்த்தி செய்கிறது. சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஈராக் மற்றும் கத்தார் போன்ற நாடுகளில் இருந்து வரும் எரிவாயு டேங்கர்களுக்கு ஹோர்முஸ் ஜலசந்திதான் மிகக் குறுகிய மற்றும் குறைந்த செலவிலான முக்கிய வழித்தடமாகும். இந்த வழித்தடம் தடைபட்டதால் எல்பிஜி விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், சமீபத்திய நிகழ்வுகளின் பின்னணியில், நமக்கு ஒரு நற்செய்தி கிடைத்துள்ளது..

ஈரான் சமீபத்தில் ஹோர்முஸ் நீரிணையை முழுமையாக மீண்டும் திறப்பதாக அறிவித்துள்ளது. அமெரிக்க–ஈரான் போர் பதட்டங்கள் காரணமாக கடந்த 47 நாட்களாக இந்த வழித்தடம் கிட்டத்தட்ட மூடப்பட்டிருந்தது. உலகின் சுமார் 20 சதவீத எண்ணெயும், பெரும் அளவிலான எல்பிஜியும் இந்த முக்கிய கடல்வழிப் பாதை வழியாகவே கொண்டு செல்லப்படுகின்றன. இந்த வழித்தடம் மூடப்பட்டதால், இந்தியா போன்ற நாடுகளில் எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோக நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமையன்று ஈரான் அதிகாரப்பூர்வமாக இந்த வழித்தடத்தை மீண்டும் திறப்பதாக அறிவித்த நிலையில், அனைவரின் பார்வையும் இப்போது ஒரே ஒரு கேள்வியின் மீது உள்ளது: இந்தியாவில் எல்பிஜி சிலிண்டர் விலை குறையுமா?

இந்தியா தனது பெரும்பாலான எல்பிஜி தேவைகளுக்கு இறக்குமதியையே சார்ந்துள்ளது. ஹோர்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதால், விநியோகம் தாமதமானது மட்டுமல்லாமல், சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் விநியோக நிறுவனங்கள் குறைந்த கையிருப்புடன் செயல்படவும் நிர்பந்திக்கப்பட்டுள்ளன. எல்பிஜி பற்றாக்குறை மோசமடைந்து வருவதால், அரசாங்கம் உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலையை உயர்த்தியுள்ளது.

**எல்பிஜி சிலிண்டர் விலை குறையுமா?**

ஹோர்முஸ் நீரிணை திறக்கப்பட்ட உடனேயே எரிவாயு விலைகள் குறையும் என்பது உறுதியாகத் தெரியவில்லை. காரணம், ஹோர்முஸ் ஜலசந்தி திறக்கப்பட்டாலும் கூட, விநியோகம் உடனடியாக போருக்கு முந்தைய நிலையை எட்டுவது கடினமாக இருக்கும். கத்தாரில் உள்ள ராஸ் லஃபான் எரிவாயு உற்பத்தி நிலையத்தின் மீது ஈரான் நடத்திய தாக்குதல்களே இதற்கு முக்கிய காரணமாகும். இந்தத் தாக்குதல்களால் கத்தாரின் மொத்த எல்என்ஜி ஏற்றுமதித் திறனில் சுமார் 17 சதவீதம் சேதமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. சேதமடைந்த உள்கட்டமைப்பைச் சரிசெய்ய 3 முதல் 5 ஆண்டுகள் ஆகக்கூடும். இது ஒவ்வொரு ஆண்டும் உலக சந்தையில் சுமார் 12.8 மில்லியன் டன் எல்என்ஜி பற்றாக்குறைக்கு வழிவகுக்கும். இந்தியா கத்தாரிலிருந்துதான் அதிக அளவு இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்கிறது.

**இந்தியாவுக்கு என்ன நன்மைகள்?**

ஹோர்முஸ் நீரிணை மீண்டும் திறக்கப்படுவது, உலகளாவிய எரிசக்திப் போக்குவரத்தின் மீதான அழுத்தத்தை ஓரளவு குறைக்கக்கூடும். கப்பல் போக்குவரத்து வழித்தடங்கள் இயல்பு நிலைக்குத் திரும்பலாம். பயண நேரம் குறைவதோடு, காப்பீட்டுச் செலவுகளும் குறைய வாய்ப்புள்ளது. மாற்று வழிகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் கூடுதல் செலவும் குறையும்.

இது இந்திய எரிசக்தி நிறுவனங்களின் இறக்குமதிச் செலவுகளைக் குறைப்பதுடன், உள்நாட்டு எரிசக்தி விலைகள் மீதான அழுத்தத்தையும் ஓரளவுக்குத் தணிக்கக்கூடும். இந்திய இறக்குமதியாளர்களுக்கு மீண்டும் பரந்த அளவிலான வாய்ப்புகள் கிடைக்கும். வளைகுடா நாடுகளிடமிருந்து சிறந்த நிபந்தனைகளின் அடிப்படையில் கொள்முதல் செய்வதற்கான வாய்ப்பும் உருவாகும்.

# சத்தமாக பேசினால் அபராதம் - மெட்ரோ நிர்வாகம் எச்சரிக்கை!




சென்னை, ஏப். 18–

சென்னையில் நிலவும் போக்குவரத்து நெரிசலுக்கு பெரும் தீர்வாக இருப்பது மெட்ரோ ரெயில்கள் தான். விமான நிலையம், கோயம்பேடு பேருந்து நிலையம், எழும்பூர், சென்ட்ரல் என முக்கிய பகுதிகளை இந்த மெட்ரோ ரெயில்கள் இணைக்கின்றன. இதனால் நாள்தோறும் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது.

மெட்ரோ ரெயில்களில் பயணிகள் சிலர் செல்போனில் சத்தமாக பாட்டு கேட்பது, வீடியோ பார்ப்பது, அலைபேசிகளில் பேசுவது சக பயணிகளுக்கு இடையூறு அளிப்பதாக உள்ளது. இந்த நிலையில், பயணிகளுக்கு முக்கிய அறிவுறுத்தல் ஒன்றை மெட்ரோ நிர்வாகம் விடுத்துள்ளது. இது குறித்து மெட்ரோ ரெயில் நிர்வாகம் கூறியிருப்பதாவது: சென்னை மெட்ரோ ரெயில் மற்றும் வளாகத்திற்குள் சக பயணிகளுக்குத் தொந்தரவு விளைவிப்பதோ அல்லது அவர்களின் வசதிக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயல்படவோ கூடாது. அலைபேசியில் உரத்த குரலில் பேசுவது செவியில் பொருத்தி கொள்ளும் ஒலிபெருக்கி (Headphones) இன்றி இசை அல்லது வீடியோக்களைப் பார்ப்பது; அலைபேசியில் மெட்ரோ ரெயில்களிலும் வளாகங்களிலும் ஒலிபெருக்கி வசதியைப் பயன்படுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது. இந்த விதிகளை மீறும் பயணிகளுக்கு ரூ.500 வரை அபராதம் விதிக்கப்படலாம் ''என்று தெரிவித்துள்ளது.

# பாதுகாப்பு விண்கலத்துடன் விண்ணில் சீறிப்பாய்ந்த ரஷியாவின் சோயுஸ் ராக்கெட்!



ரஷியா, ஏப். 18–

கடந்த வாரம் ரஷிய அதிபர் விளாடிமிர் புதினுடனான சந்திப்பின் போது, பிராட்பேண்ட் இணைய செயற்கைக்கோள்கள் ஏவப்படும் வேளையில் உக்ரேனிய ஆளில்லா விமானங்கள் விண்வெளி ஏவுதளத்தை தாக்க முயற்சி செய்து வருவதாக ரோஸ்கோஸ்மோஸ் தலைவர் டிமிட்ரி பகானோவ் வெளிப்படுத்தினார்.மாஸ்கோ, ரஷியாவின் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு சொந்தமான விண்கலத்தை ஏந்தி செல்லும் சோயுஸ்–2.1பி ஏவுகணையை, ரஷ்யாவின் விண்வெளி படைகள் இன்று பிளெசெட்ஸ்க் விண்வெளி ஏவுதளத்திலிருந்து விண்ணில் செலுத்தியதாக, அரசு விண்வெளி நிறுவனமான ரோஸ்கோஸ்மோஸ் தெரிவித்தது. ஏவப்பட்ட பிறகு, சோயுஸ்–2.1பி ஏவுகணையானது, விண்வெளி ஏவுதளத்தின் தரைவழி அளவீட்டு வளாகத்தால் கண்காணிப்பிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த ஏவுதல் வழக்கம் போல் நடைபெற்றது, என்று ரோஸ்கோஸ்மோஸ் டெலிகிராமில் கூறியது.

இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து, ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகத்திற்கான மூன்று செயற்கைக்கோள் ஏவு தல்கள் ஏற்கனவே பிளெசெட்ஸ்க் விண்வெளி ஏவுதளத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த வாரம் ரஷிய அதிபர் விளாடிமிர் புதினுடனான சந்திப்பின்போது, பிராட்பேண்ட் இணைய செயற்கைக்கோள்கள் ஏவப்படும் வேளையில் உக்ரேனிய ஆளில்லா விமானங்கள் விண்வெளி ஏவுதளத்தை தாக்க முயற்சி செய்து வருவதாக ரோஸ்கோ ஸ்மோஸ் தலைவர் டிமிட்ரி பகானோவ் வெளிப்படுத்தினார்.

# ஏசியன் பெயிண்ட்ஸ் தண்ணீர்ப்புகா துறையில் 'டேம்ப் ப்ரூஃப்'-ஐ தென் இந்திய சினிமா வீடுகளுக்கான சூப்பர் ஸ்டாராக அறிவிக்கிறது.





மதுரை , ஏப். 18–

ஏசியன் பெயிண்ட்ஸ் தண்ணீர்ப்புகா துறையில் தனது ஈரத்தடுப்பு தீர்வான "டேம்ப் ப்ரூஃப்"–ஐ தென் இந்திய சினிமா வீடுகளுக்கான சூப்பர் ஸ்டாராக நிலைநிறுத்தும் புதிய பிரச்சாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த பிரச்சாரம், வீடுகளின் மொட்டை மாடிகள் மற்றும் அன்றாட வாழ்விடங்களில் ஏற்படும் கசிவு மற்றும் வெப்பம் அதிகரிப்பு போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வாக உருவாக்கப்பட்டுள்ளது. தென் இந்தியாவின் பிரபலமான "Rowdy Baby" இசையால் ஈர்க்கப்பட்ட இந்த பிரச்சாரம், திரைப்படம் இசையும் இணைந்த கதை சொல்லும் முறையில் தயாரிக்கப்பட்டது. இது தண்ணீர் புகா தீர்வை எளிதாக புரிந்து கொள்ளும் வகையில், நினைவில் நிற்கும் மற்றும் கலாச்சார ரீதியாக இணையும் அனுபவமாக இருக்கிறது.

இந்த பிரச்சாரத்தின் முக்கிய நோக்கம், ஏசியன் பெயிண்ட்ஸ் Damp Proofஐ நம்பகமான மற்றும் வலிமையான பாதுகாப்பு தீர்வாக முன்னிலை படுத்துவதாகும். மேம்பட்ட வெப்ப பிரதிபலிப்பு தொழில்நுட்பத்தால் மேற்பரப்பு வெப்பநிலை குறைக்கவும் உதவுவதால், இது மழைக்காலத்திலும் கோடைக்காலத்தில் வீடுகளுக்கு முழுமையான பாதுகாப்பை வழங்கும் தீர்வாக சித்தரிக்கப்படுகிறது.

# சியோமி ரெட்மி A7 ப்ரோ 5G அறிமுகம்: 6.9 அங்குல திரை, 6300mAh பேட்டரி



கோயம்புத்தூர், ஏப். 18–

சியோமி இந்தியா, ரெட்மி A சீரிஸில் முதல் "Pro" மாடல் ரெட்மி A7 ப்ரோ 5G ஸ்மார்ட்போன் அறிமுகப்படுத்தியுள்ளது. 6.9 அங்குல பெரிய திரை, 120Hz ரெப்ரெஷ் ரேட் மற்றும் 800 நிட்ஸ் பிரகாசத்துடன், இது உலாவல், சமூக ஊடகம் மற்றும் வீடியோ பார்வைக்கு சிறந்த அனுபவத்தை வழங்குகிறது. Wet Touch 2.0 மற்றும் TV Rheinland கண் பாதுகாப்பு சான்றிதழ் போன்ற அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

இந்த சாதனம் 6300mAh பெரிய பேட்டரியுடன் வருகிறது, 15W சார்ஜிங் மற்றும் 7.5W ரிவர்ஸ் சார்ஜ் ஆதரிக்கிறது. ஆக்டா–கோர் 5G புராசஸர் மற்றும் 8GB வரை விரிவாக்கக்கூடிய ரேம் மூலம் தினசரி பயன்பாட்டிற்கு வேகமாக செயல்திறன் கிடைக்கிறது. 32MP AI டூயல் கேமரா மற்றும் 8MP முன் கேமரா, AI Sky மற்றும் Document Mode போன்ற அம்சங்களுடன் தரமான புகைப்பட அனுபவத்தை வழங்குகிறது.

விலை விவரம்: 4GB+64GB மாடல் ₹12,499 ஆக இருந்தாலும், அறிமுக சலுகையாக ₹11,499க்கு கிடைக்கிறது. 4GB+128GB மாடல் ₹13,499 இருந்து ₹12, 499க்கு வழங்கப்படுகிறது. இந்த ஸ்மார்ட்போன் Am–azon, Mi.com மற்றும் ரீட்டெயில் கடைகளில் ஏப்ரல் 15, 2026 முதல் கருப்பு, மிஸ்ட் ப்ளூ மற்றும் சன்செட் ஆரஞ்சு நிறங்களில் விற்பனைக்கு கிடைக்கும்.

# நூற்றுக்கு 100: 10ஆம் வகுப்பு தேர்வில் ஃபிசிக்ஸ் வாலா மாணவர்கள் சூப்பர் சாதனை!




சென்னை , ஏப். 18–

CBSE 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு 2026 முடிவில், ஃபிசிக்ஸ் வாலா மாணவர்கள் சிறப்பான சாதனையைப் பதிவு செய்தனர். பலர் அதிக மதிப்பெண்கள் பெற்றதுடன், 100% மதிப்பெண் பெற்றவர்களும் இடம் பெற்றனர். குறிப்பாக பஞ்சாபின் ஃபாசில்காவைச் சேர்ந்த வைபவ் அரோரா, குஜராத்தின் அகமதாபாத்தைச் சேர்ந்த அமோலிக் பண்டிட்டா, ஒடிசாவின் புவனேஸ்வரைச் சேர்ந்த ஆயுஸ்மான் மொஹாபத்ரா ஆகியோர் முழு மதிப்பெண்கள் பெற்று நாட்டில் முதலிடத்தைப் பிடித்தனர்.

இந்த சாதனையை முன்னிட்டு, PW வித்யாபீத் சென்னை மையத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. மாணவர்கள் தங்கள் வெற்றிக்கு காரணமாக ஆசிரியர்களின் வழிகாட்டுதல், தொடர்ந்து பயிற்சி, மற்றும் மாதிரி தேர்வுகள் எழுதும் பழக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டனர். ஒழுங்கான படிப்புத் திட்டமும் அவர்களின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தது.

ஃபிசிக்ஸ் வாலா நிறுவனத்தின் CEO அலக் பாண்டே, அனைத்து மாணவர்களையும் பாராட்டி, இந்த வெற்றி தொடர்ச்சியான முயற்சி மற்றும் சரியான கல்வி ஆதரவு அமைப்பின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது என்றார். இந்த ஆண்டு 25 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தேர்வு எழுதிய நிலையில், ஆன்லைன் மற்றும் ஹைபிரிட் கற்றல் முறையின் தாக்கம் மேலும் வலுவாகியுள்ளது.

# சென்னையில் மலேசியா வருகை ஆண்டு 2026 முன்னிட்டு Tourism Malaysia தொழில் விளக்கக் கூட்டம் & ஒத்துழைப்பு விருந்து



சென்னை, ஏப். 18–

மலேசிய சுற்றுலா வாரியம் (Tourism Malaysia) சென்னை மற்றும் சென்னையில் மலேசிய துணைத் தூதரகம் இணைந்து, "மலேசியா வருகை ஆண்டு 2026" (VMY 2026) தொழில் விளக்கக் கூட்டம் மற்றும் நெட்வொர்க்கிங் விருந்தினை The Leela Palace Chennai–இல் வெற்றிகரமாக நடத்தியது. இந்த நிகழ்வில் விமான நிறுவனங்கள், பயண சங்கங்கள், பயண முகவர்கள் மற்றும் சுற்றுலா துறையின் முக்கிய பங்குதாரர்கள் கலந்து கொண்டு, இந்திய சந்தையில் மலேசியாவின் நிலைமை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் கருத்துக்களை பகிர்ந்தனர்.

இந்த நிகழ்வில் மலேசிய துணைத் தூதர் திரு. கே. சரவண குமார் மற்றும் Tour–ism Malaysia சென்னை (தென் இந்தியா & இலங்கை) இயக்குநர் திரு. ஹிஷாமுத்தீன் முஸ்தபா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தனது உரையில், இந்திய சந்தையின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தையும், VMY 2026 இலக்குகளை அடைய தொடர்ந்து ஒத்துழைப்பு அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தினர். மேலும், வலுவான விமான இணைப்புகள் மற்றும் புதிய சுற்றுலா தயாரிப்புகள் இந்திய பயணிகளை ஈர்க்கும் முக்கிய அம்சங்கள் குறிப்பிடப்பட்டது.

நிகழ்வின் முக்கிய அம்சமாக, Tourism Malay–sia சென்னை மற்றும் பிக் யூர் டிரெயின் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதன் மூலம் இந்தியாவில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிக்கும் இலக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு மலேசிய சுற்றுலா பங்குதாரர்கள் தங்கள் சேவைகளை அறிமுகப்படுத்தி, புதிய பயண தொகுப்புகளை உருவாக்க ஊக்குவித்தனர்.



# மாமியார் மருமகளுக்குள் அடிக்கடி சண்டை வருகிறதா? கவலையை விடுங்க !





மாமியார் மருமகளுக்குள் இருக்கும் சண்டைகளை தீர்ப்பது என்ற என்பது சற்று கடினமான காரியமாகவே இருக்கும். இவர்களுக்குள் முட்டிக் கொண்டால் அவ்வளவுதான் குடும்பமே நிம்மதியாக இருக்க முடியாது. அப்படிப்பட்ட மாமியார் மருமகள் சண்டையை கூட தீர்த்து வைக்கும் ஜோதிட சாஸ்திரம் சீனாவில் இருக்கிறதாம்! அது என்னவென்று தெரிந்து கொள்ள தொடர்ந்து இந்த ஆன்மீகம் சார்ந்த பதிவை நோக்கி பயணிப்போம் வாருங்கள்.. திருமணமான புதிதில் மருமகள் மாமியாரை தன்னுடைய தாயாகவே பாவிக்கிறாள் அதனால் தான் அத்தை என்று சொல்லாமல் 'அம்மா' என்று சிலர் அழைப்பதுண்டு. ஆனால் திருமணமான பின்பு நாட்கள் செல்ல செல்ல தன் தாயைப் போல அவர்கள் நடந்து கொள்ளவில்லை வேற்றுமையாக பார்க்கிறார் என்று மனம் வெறுத்து பொறுத்தது போதும் என்று சண்டையிட துவங்குகிறாள்.

எல்லா உறவுகளையும் இழந்து விட்டு புத்தம் புதிய வீட்டில் காலடி எடுத்து வைக்கும் பெண்களுக்கு மனரீதியான பிரச்சனைகள் நிறைய வரும். இதை பெரியவர்கள் தான் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் அவர்களே இவள் என்ன இப்படி நடந்து கொள்கிறாள்? இவள் வீட்டில் என்ன கற்றுக் கொடுத்தார்கள்? என்று மனம் நோகும்படி பேசி வெறுப்பை வாங்கி சேர்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் பக்குவப்படுவதற்குள் அவர்களுக்குள் நஞ்சை விதைப்பது நீங்கள் தான்! மாமியார் என்பது மிகப் பெரிய பொறுப்பு! அதை சரிவர கடைபிடிக்க தவறினால் குடும்பம் சிதறிப் போகும். எது நடக்க கூடாது என்று நீங்கள் நினைத்தீர்களோ அது நடக்கும். எனவே நீங்களும் மற்ற மாமியார்களை போல் அல்லாமல் பொறுப்பாகவும், தன் மகளைப் போல் பார்க்காவிட்டாலும் வயதில் குறைந்த பெண் அவளுக்கு நாம் தான் எல்லாமே சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றும் சிந்திக்க வேண்டும்.

மாமியார் மருமகளுக்குள் அடிக்கடி சண்டை வருகிறது என்றால் சீனாவில் சீன ஜோதிட சாஸ்திரப்படி தென்மேற்கு திசையில் மாமியார் மருமகள் இருவரும் சேர்ந்த புகைப்படம் அல்லது அவர்கள் இருவருடன் மற்றவர்கள் இருக்கும் ஏதாவது ஒரு புகைப்படத்தை ஹாலில் மாட்டி வைப்பார்களாம். இப்படி செய்தால் மாமியார் மருமகளுக்குள் இருக்கும் சண்டை சச்சரவுகள் படிப்படியாக குறைந்து அவர்களுக்குள் ஒற்றுமை உண்டாகும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாக அவர்களுக்கு இருந்து வருகிறது. 'ஃபுங்ஸ்வே' என்கிற ஜோதிட சாஸ்திரம் ஒன்று இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. இந்த சாஸ்திர நூலில் குடும்ப பிரச்னைகளுக்கான எளிய தீர்வுகள் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் மாமியார் மருமகளுக்குள் நடக்கும் சண்டைக்கு இவ்வகையான தீர்வு கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த ஜோதிட சாஸ்திரத்தின் படி சீனாவில் மாமியார் மருமகளுக்குள் சண்டை நடந்தால் இதுபோல தென்மேற்கு திசையில் உயரமாக மாமியார் மருமகளின் புகைப்படத்தை மாட்டி வைத்து விடுவார்களாம்.

## சினிமா துளிகள்..!

# 'இருமுகன்' இயக்குநருடன் மீண்டும் இணையும் விக்ரம் - 'சீயான் 63' அறிவிப்பு!



நடிகர் விக்ரம் நடிக்கும் 63வது திரைப்படத்தின் அறிவிப்பு வீடியோவை அவரது பிறந்தநாளை முன்னிட்டு படக்குழு வெளியிட்டுள்ளது.

கடந்தாண்டு வெளியான வீர தீர சூரன் படத்திற்கு பிறகு, விக்ரமின் அடுத்தப் படம் தொடர்பான அப்டேட்டிற்கு ரசிகர்கள் காத்திருந்தனர். இந்நிலையில் இருமுகன் இயக்குநர் ஆனந்த் ஷங்கர் இயக்கத்தில் விக்ரம் நடிக்க உள்ளதாக அறிவிப்பு வெளியாகி உள்ளது.

சத்திய ஜோதி பிலிம்ஸ் நிறுவனம் இப்படத்தைத் தயாரிக்கிறது. இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். இப்படத்தின் அறிவிப்புடன் ஒரு சிறப்பு டீசரும் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விக்ரம் ஒரு சமையல்காரராக மர்மமான பின்னணியைக் கொண்ட கதாபாத்திரத்தில் நடிப்பது போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

முன்னதாக, இயக்குநர் போடி கே. ராஜ்குமார் இயக்கத்தில் 'சீயான் 63' உருவாக இருப்பதாகச் செய்திகள் வந்தன. ஆனால், தற்போது ஆனந்த் சங்கர் இயக்கும் படமே விக்ரமின் 63–வது படமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.




## காலையில் இந்த நீரைப் பருகினால்.. உடலில் இருந்து நச்சுகள் நீங்கும்..!



ஆயுர்வேதத்தின் படி, துளசி மற்றும் தேன் ஆகியவற்றின் கலவை ஒரு சக்திவாய்ந்த மருந்தாகும். தினமும் காலையில் எழுந்ததும் இந்தக் கலவையை அருந்துவது, உடலுக்கு ஒரு இயற்கையான நச்சு நீக்கத்தை (detox) அளிப்பது மட்டுமல்லாமல், பல நோய்களிலிருந்தும் பாதுகாக்கிறது. நவீன ஆராய்ச்சிகளும் இந்த அற்புத பானத்தின் நன்மைகளை அங்கீகரிக்கின்றன.

துளசியில் பாக்டீரியா எதிர்ப்பு மற்றும் வைரஸ் எதிர்ப்புப் பண்புகள் நிறைந்துள்ளன. மறுபுறம், தேனில் ஆன்டி–ஆக்ஸிடன்ட்கள் (உயிர்ச்சத்துக்கள்) நிறைந்துள்ளன. இவை இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து உட்கொள்வது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகிறது. குறிப்பாக வானிலை மாறும்போது, சளி, காய்ச்சல் மற்றும் பிற தொற்றுகளுக்கு எதிராக இந்தப் பானம் ஒரு பாதுகாப்பு அரணாகச் செயல்படுகிறது. இது உடலில் உள்ள வெள்ளை இரத்த அணுக்களின் திறனை அதிகரித்து, நோய்க்கிருமிகளை எதிர்த்துப் போராடும் சக்தியை வழங்குகிறது.

**எடை குறைப்பிற்கான நச்சு நீக்கத்திற்கு உதவுகிறது:**

உடலில் தேங்கும் நச்சுகள் பல நோய்களுக்குக் காரணமாகின்றன. துளசி மற்றும் தேன் கலந்த நீர் ஒரு இயற்கையான நச்சு நீக்க பானமாகச் செயல்பட்டு, இரத்தத்திலிருந்து கழிவுகளை வெளியேற்றுகிறது. இது உடலின் வளர்சிதை மாற்றத்தை (metabolism) துரிதப்படுத்தி, அதன் மூலம் உடலில் தேங்கியுள்ள கொழுப்பைக் கரைக்க உதவுகிறது. நீங்கள் உடல் எடையைக் குறைக்க முயற்சிப்பவர் என்றால், உங்கள் நாளை இந்தப் பானத்துடன் தொடங்குவது செரிமான மண்டலத்தைச் சுத்திகரித்து, நீங்கள் விரும்பும் முடிவுகளை விரைவாகப் பெற உதவும்.

**மன அழுத்தத்தைக் குறைத்தல்:**

துளசி ஒரு சிறந்த 'அடாப்டோஜென்' (adaptogen) ஆகக் கருதப்படுகிறது; இது உடல் மன அழுத்தத்தைச் சமாளிக்க உதவுகிறது. தேனுடன் சேர்த்து உட்கொள்ளும்போது, இது உடலில் உள்ள கார்டிசோல் (மன அழுத்த ஹார்மோன்) அளவைக் குறைத்து, நரம்புகளை அமைதிப்படுத்துகிறது. இது நாள் முழுவதும் நீங்கள் ஆற்றலுடனும், முழு கவனத்துடனும் செயல்பட உதவும். மேலும், துளசி இரத்தத்தைச் சுத்திகரிப்பதால், முகப்பருக்கள் குறைந்து, சருமம் உள்ளிருந்தே பொலிவு பெறுகிறது.தேன் சருமத்திற்குத் தேவையான ஈரப்பதத்தை அளித்து, முகத்திற்கு ஒரு இயற்கையான ஒளியைத் தருகிறது.

**செரிமானத்தை மேம்படுத்துதல்:**

அமிலத்தன்மை (acidity), மலச்சிக்கல் அல்லது வயிறு உப்புசம் ஆகியவற்றால் அவதிப்படுபவர்களுக்கு இந்தக் கலவை ஒரு வரப்பிரசாதமாகும். இது வயிற்றின் pH அளவைச் சமநிலைப்படுத்தி, செரிமான நொதிகளைத் தூண்டுகிறது. இதைத் தயாரிப்பது மிகவும் எளிது: ஒரு குவளை நீரில் 4–5 துளசி இலைகளைப் போட்டுக் கொதிக்க வைத்து, நீர் மிதமான சூட்டிற்கு வந்ததும் அதில் ஒரு spoonful தேன் சேர்க்கவும். நினைவில் கொள்ளுங்கள், கொதிக்கும் நீரில் நேரடியாகத் தேனைச் சேர்க்கக்கூடாது; அவ்வாறு செய்வது தேனின் மருத்துவப் பண்புகளை அழித்துவிடும். இந்தச் சிறிய பழக்கம் உங்கள் ஆரோக்கியத்திற்குப் பெரும் நன்மைகளைச் செய்யும்.

## திமிர் பிடித்தவர்.. மோசமான குணம் படைத்தவர் - செங்கோட்டையனை விளாசிய எடப்பாடி பழனிசாமி!



சென்னை, ஏப் 18–

அதிமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிப்பாளையத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் கூறியதாவது:

* கட்சி கட்டுப்பாட்டை மீறியதாலும் அகங்காரத்தின் காரணமாகவும் செங்கோட்டையன் வெளியேற்றப்பட்டார்.

அதிமுகவில் யாரையும் வளர விடாதவர் செங்கோட்டையன் – எடப்பாடி பழனிசாமி

* செங்கோட்டையன் திமிர் பிடித்தவர். மோசமான குணம் படைத்தவர்.
* கட்சித் தொண்டர்களிடம் மரியாதை இல்லாமல் நடந்து கொண்டவர் செங்கோட்டையன்.
* செங்கோட்டையன் மீது அவரது மனைவி, மகன் புகார் அளித்ததால் அவரது பதவி பறிக்கப்பட்டது.

## செய்தியாளர் / போட்டோ கிராபர் தேவை

மதுரை / சென்னை ஐயை மையமாக கொண்டு இயங்கிவரும் ஒரு பத்திரிகை நிறுவனத்திற்கு விளம்பர பிரிவில் பணிபுரிய துடிப்பும் /ஆர்வமும் /அனுபவமும் நிறைந்த செய்தியாளர்கள் / புகைப்பட கலைஞர்கள் தேவை.

தொடர்பு – 7904806432

# மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா ஏப். 19-ல் கொடியேற்றத்துடன் தொடக்கம்!


மதுரை,ஏப். 18–

சித்திரை திருவிழா என்றாலே மாமதுரையில் சைவ, வைணவ சமயங்களின் ஒற்றுமையை பிரதிபலிக்கும் உலகப்புகழ் பெற்ற உன்னத விழாதான் அனைவருக்கும் நினைவுக்கு வரும்.

சைவ சமயம் சார்ந்து மீனாட்சி அம்மன் கோவிலில் நடக்கும் விழாவும், வைணவம் சார்ந்து கள்ளழகர் கோவில் நடக்கும் விழாவும் சங்கமித்து பெருவிழாவாக மதுரை மட்டுமின்றி தென்மாவட்ட மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதில் மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா ஏப் 19 (ஞாயிற்றுக்கிழமை) காலையில் கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. இதில் முக்கிய நிகழ்ச்சிகளாக மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம் 26–ந் தேதியும், திக்கு விஜயம் 27–ந் தேதியும், மீனாட்சி அம்மன்–சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் 28–ந் தேதியும், மாசி வீதிகளில் தேரோட்டம் 29–ந் தேதியும் நடைபெற உள்ளன.

மதுரையை அடுத்த அழகர் கோவிலில் உள்ள கள்ளழகர் திருக்கோவில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு, கடந்த ஜனவரி மாதம் ஆயிரம் பொன் சப்பரத்துக்கு முகூர்த்த விழா நடந்தது.



இதன் அடுத்த நிகழ்வாக கள்ளழகர் கோவிலின் உப கோவிலான மதுரை தல்லாகுளம் பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோவிலின் முன்பும், ராஜகோ புரம் முன்பும் என இரு இடங்களில் கள்ளழகர் கோவில் சித்திரை திருவிழா வுக்கு நேற்று முகூர்த்தக்கால் நடப்பட்டன

அப்போது, அழகரின் ஆயிரம் பொன் சப்பரத்தில் இணைக்கப்படும் யாளி திருமுகத்திற்கு அலங்காரம் செய்யப்பட்டு, அழகர் மலை நூபுர கங்கை தீர்த்தத்தால் பூஜைகள் நடத்தப்பட்டன. வேத மந்திரங்கள் ஒலிக்க தீபாராதனை நடந்தது.

தொடர்ந்து அழகர் எழுந்தருளும் வைகை ஆறு தேனூர் மண்டபத்தின் முன்பாகவும் முகூர்த்தக்கால் நடும் விழா நடந்தது. இந்த ஆண்டு அழகர், 494 மண்டகபடிகளில் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். எனவே அந்த மண்டகப்படிகளிலும் ஏற்பாடுகள் தொடங்கின.

அழகர் கோவில் சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிகள் வருகிற 29–ந் தேதி முதல் தொடங்குகின்றன. அன்று மாலையில் கண்டாங்கி பட்டு உடுத்தி கள்ளழகர் திருக்கோலத்தில், நேரிக்கம்பு கையில் ஏந்தி பக்தர்கள் புடைசூழவும், அதிர்வேட்டுகள் முழங்கவும் மதுரைக்கு பெருமாள் புறப்பட இருக்கிறார்.

30–ந் தேதி மூன்றுமாவடியில் அழகரை மதுரை மக்கள் எதிர்கொண்டு வரவேற்கும் எதிர்சேவை நடக்கிறது.

சித்திரை திருவிழாவின் முத்திரை பதிக்கும் நிகழ்ச்சியாக கள்ளழகர், மதுரை வைகை ஆற்றில் மே 1–ந்தேதி அதிகாலை 5.35 மணிக்கு மேல் 5.55 மணிக்குள் தங்கக்குதிரை வாகனத்தில் வீற்றிருந்து எழுந்தருள்கிறார். இந்த கண்கொள்ளா காட்சியை 15 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் திரண்டு தரிசிப்பது வழக்கம்.

மறுநாள் கருட வாகனத்தில் தேனூர் மண்டபத்தில் மண்டுக முனிவருக்கு சாப விமோசனம் அளித்தல், அன்றிரவு ராமராயர் மண்டபத்தில் விடிய விடிய தசாவதார திருக்கோலங்களில் அழகர் காட்சி அளித்தல், 3–ந் தேதி மன்னர் சேதுபதி மண்டபத்தில் இரவு பூப்பல்லக்கு விழா நடைபெறுகிறது. 4–ந் தேதி மதுரையில் இருந்து அழகர் புறப்பட்டு, 5–ந் தேதி இருப்பிடம் சேர உள்ளார்.

# நாடு முழுவதும் ரூ.12,500 கோடியில் குழாய் வழி எரிவாயு வழித்தடம்! மத்தியஅரசு!!

டெல்லி, ஏப். 18–

நாடு முழுவதும் தற்போதைய நிலையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் எரிவாயு, டேங்கர் லாரிகளில் சாலை மார்க்கமாக எடுத்து செல்லப்பட்டு, சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. பிறகு அது சுத்திகரிக்கப்பட்டதும் சிலிண்டரில் நிரப்பப்பட்டு வீடுகளுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் விநியோகம் செய்யப்படுகிறது.

இதனால் எரிவாயு கொண்டு செல்ல சாலை மார்க்க போக்குவரத்தையே எண்ணெய் நிறுவனங்கள் அதிகம் சார்ந்துள்ளன. இந்த சார்ந்திருக்கும் நிலையை குறைக்கும் நோக்கில், குழாய் வழித்தடத்தை ஏற்படுத்த



பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை ஆணையம் திட்டம் வகுத்துள்ளது.

அதன்படி, எரிவாயு இறக்குமதி செய்யப்படும் முனையங்கள், எரிவாயு சுத்திகரிப்பு நிலையங்கள், சிலிண்டரில் எரிவாயு நிரப்பப்படும் இடங்கள் இடையே குழாய்கள் அமைக்கப்படவுள்ளது. இந்த குழாய் வழித்தடம் வழியே அந்த 3 இடங்களுக்கும் எரிவாயு கொண்டு செல்லப்படும். இதனால் சாலை மார்க்கமாக டேங்கர் லாரிகளில் எரிவாயு எடுத்து செல்வது வெகுவாக குறையும். மேலும் எரிவாயு பாதுகாப்பும் மேலும் வலுப்படும்.. இந்தத் திட்டத்தின் முதல்கட்டமாக, குழாய் வழித்தடம் அமைக்க 9 இடங்களை பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை ஆணையம் அடையாளம் கண்டுள்ளது. அதில் 2,500 கிலோ மீட்டர் தூரத்துக்கு 4 முக்கிய இடங்களில் குழாய் வழித்தடம் அமைப்பது தொடர்பான ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்யும் பணிகள் நடைபெறுகிறது. இதை செயல்படுத்த ரூ.12,500 கோடி ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதால் 2030–ஆம் ஆண்டுக்குள் சாலை மார்க்க எரிவாயு போக்குவரத்தை வெகுவாக குறைக்க முடியும் எனவும், டேங்கர் லாரிகளால் ஏற்படும் வெடிவிபத்துகளும் குறையும் எனவும் நம்பப்படுகிறது.

# தென் மாவட்டங்களுக்கு கோடை கால சிறப்பு ரெயில்கள் இயக்கம்- தெற்கு ரெயில்வே அறிவிப்பு!

சென்னை, ஏப். 18–

கோடை கால கூட்ட நெரிசலை குறைக்க சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு சிறப்பு ரெயில் சேவையை தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

தெற்கு ரெயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

கோடை காலத்தை முன்னிட்டு பயணிகளின் வசதிக்காகவும், கூட்ட நெரிசலை குறைப்பதற்காகவும் தூத்துக்குடி – தாம்பரம், எழும்பூர் – கன்னியாகுமரி, தாம்பரம் – செங்கோட்டை இடையே சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட உள்ளது. அதன்படி, வரும் 20,27 ஆகிய தேதிகளில் தூத்துக்குடியில் இருந்து இரவு 11.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (வண்டி எண்–06018) அடுத்தநாள் மதியம் 12.30 மணிக்கு தாம்பரம் வந்தடையும். தாம்பரத்தில் இருந்து 21,28 ஆகிய தேதிகளில் மதியம் 3.30



மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06017) அடுத்த நாள் காலை 4.30 மணிக்கு தூத்துக்குடி சென்றடையும்.

சென்னை எழும்பூரில் இருந்து 22–ந்தேதி இரவு 11.50 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06045) அடுத்தநாள் மதியம் 1 மணிக்கு கன்னியாகுமரி சென்றடையும். மறுமார்க்கமாக கன்னியாகுமரியில் இருந்து 26–ந்தேதி இரவு 11.25 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06046) அடுத்தநாள் காலை 11.15 மணிக்கு எழும்பூர் வந்தடையும். இதேபோல, தாம்பரத்தில் இருந்து 22–ந்தேதி மதியம் 3.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06089) அடுத்தநாள் காலை 5.30 மணிக்கு செங்கோட்டை சென்றடையும். மறுமார்க்கமாக, செங்கோட்டையில் இருந்து 23–ந்தேதி இரவு 10.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06090) அடுத்த நாள் காலை 11.30 மணிக்கு சென்னை கடற்கரை ரெயில் நிலையம் வந்தடையும். மேலும், சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் இருந்து 22–ந்தேதி மதியம் 3.10 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06023) அதேநாள் இரவு 11.30 மணிக்கு கோவை மாவட்டம் போத்தனூர் சென்றடையும்.

மறுமார்க்கமாக போத்தனூரில் இருந்து 23–ந்தேதி இரவு 11.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06024) அடுத்தநாள் காலை 8.20 மணிக்கு சென்ட்ரல் வந்தடையும். போத்தனூரில் இருந்து 21,22,25,26 ஆகிய தேதிகளில் காலை 7.40 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயிலானது (06028) அதேநாள் மாலை 5 மணிக்கு சென்ட்ரல் ரெயில் நிலையம் வந்தடையும். அதே நாட்களில் சென்னை சென்ட்ரலில் இருந்து மாலை 6.35 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06027) அடுத்தநாள் காலை 4 மணிக்கு போத்தனூர் ரெயில் நிலையம் சென்றடையும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மத்திய அரசின் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 37 சூரிய கிராமங்கள்! திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி தீவிரம்...!

சென்னை, ஏப். 18–


மத்தியஅரசின் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 37 மாதிரி சூரிய கிராமங்கள் உருவாக்குவதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதற்கான பணியை எரிசக்திக் கழகம் மேற்கொண்டுள்ளது. இதில் சென்னையில் எதுவும் இல்லை. 'தேர்வுக்கான கோரிக்கை' (Request for Selection) செயல்முறையின் வாயிலாக, அடையாளம் காணப்பட்ட கிராமங்களுக்கு மிகவும் பொருத்தமான




சூரிய ஆற்றல் பயன்பாட்டு முறையை ஆய்வு செய்து பரிந்துரைப்பதற்காக, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் — குறிப்பாகச் சூரிய ஆற்றல் — துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு ஆலோசகரை TNGECL நிறுவனம் தேடி வருகிறது.

ஒரு சூரியசக்தி கிராமம் அமைக்க மத்திய அரசு ரூ.1 கோடி நிதியுதவி வழங்குகிறது. தமிழகத்தில் சென்னையைத் தவிர்த்து 37 மாவட்டங் களிலும் சூரியசக்தி கிராமம் உருவாக்கும் பணிகளை மின்வாரியத்தின் துணைநிறுவனமான பசுமை எரிசக்திக் கழகம் மேற்கொண்டு வருகிறது. இதற்காக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வசிக்கும் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, மாதிரி சூரிய கிராமங்கள் உருவாக்கப்பட உள்ளன.

## வேலை வாய்ப்பு
## பஞ்சாப் & சிந்து வங்கி 27 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: பஞ்சாப் மற்றும் சிந்து வங்கி
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 27 பாதுகாப்பு மேலாளர் MMGS II பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 15.04.2026
கடைசி தேதி: 05.05.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் மூலம் மட்டும்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://punjaband–sind.bank.in/

## தமிழக சட்டசபை தேர்தல்; பிரசாரத்திற்காக சென்னை வந்த ராகுல் காந்திக்கு வரவேற்பு!



சென்னை, ஏப். 18–

தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபடுவதற்காக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி இன்று காலை சென்னைக்கு விமானத்தில் வருகை தந்துள்ளார்.

அவரை, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பொறுப்பாளராக செயல்பட்டு வரும் கிரிஷ் சோடங்கர் மற்றும் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை ஆகியோர் வரவேற்றனர். இதனை தொடர்ந்து, அவர் ஹெலிகாப்டரில் பொன்னேரி செல்கிறார்.

காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரம் மேற்கொள்கிறார். இதன் பின்பு, சோளிங்கர் தொகுதிக்கு சென்று பிரசாரத்தில் ஈடுபட உள்ளார். சோளிங்கர் சென்று பிரசாரத்தில் ஈடுபட்டு விட்டு, சென்னையில் இருந்து திருச்சி சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தரும் அவர், பின்னர் ஹெலிகாப்டரில் துறையூர் செல்கிறார்.

திருச்சி மாவட்டத்தில் துறையூர் நகரில் இன்று மாலை 4 மணியளவில் நடைபெறும் கூட்டமொன்றில் ராகுல் காந்தி பங்கேற்கிறார். அவர் இன்று ஒரே நாளில் பொன்னேரி, சோளிங்கர், துறையூர் ஆகிய 3 இடங்களில் பிரசாரம் மேற்கொள்கிறார்.

## அதிரடியாக உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, ஏப். 18–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,200 உயர்ந்து ரூ.1,14,880–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.150 உயர்ந்து ரூ.14,360–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போல வெள்ளி விலையும் இன்று உயர்ந்துள்ளது. வெள்ளி கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ஒரு கிராம் ரூ.280–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!






திருமயத்தில் சுழன்று சுழன்று வாக்கு சேகரித்த அமைச்சர் ரகுபதி. புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் ரகுபதி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் லட்சுமிபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்த அமைச்சர் ரகுபதி திமுக ஆட்சியில் செய்த மகத்தான திட்டங்களை எடுத்துக் கூறியும் மீண்டும் ஆட்சி அமைந்தால் செய்யப்படவுள்ள திட்டங்களையும் வாக்காளர்களிடம் எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் அப்போது அப்பகுதி மக்கள் வேல் வழங்கியும் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

## ‘பெண்களுக்கு திமுகதான் காவலன்’ என்கிறார்.... பிரேமலதா!

சென்னை, ஏப். 18–





முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில், திமுக ஆட்சியில், பெண்கள் பாலியல் சம்பவம், கஞ்சா அதிகரித்துள்ளது என்று பேசிய கூட்டணி கட்சி தலைவரான தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதாவுக்கு, திமுக தரப்பில் கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில், தனது நிலைப்பா ட்டை மாற்றி பேசியுள்ளார். ‘பெண்களுக்கு திமுகதான் காவலன்’ என்று கூறியதுடன், தனது பேச்சை ஊடகங்கள் மாற்றி செய்தி வெளியிட்டுள்ளதாக, ஊடகங்கள் மீது பழியை சுமத்தி உள்ளார். தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பாக இருப்பது திமுக ஆட்சிதான்’ என்று பல்டி அடித்துள்ளார்.

## கைகூடாத ராகுல் - ஸ்டாலின் கூட்டுப் பிரச்சாரம்!

சென்னை,ஏப். 18–

சட்டப்பேரவை தேர்தலுக்கு மிகக் குறைந்த நாட்களே இருக்கும் நிலையில், ராகுல் காந்தியும், ஸ்டாலினும் இணைந்து பிரச்சாரம் மேற்கொள்ளாதது திமுக கூட்டணி கட்சி தொண்ட ர்களை கவலை கொள்ளச் செய்திருக்கிறது.

தேர்தல் பேச்சுவார்த்தை தொடங்கிய நாள் முதலே திமுக–வுக்கும் காங்கிரஸு க்கும் சரிப்பட்டு வரவில்லை. தொகுதிகள் எண்ணிக்கை, விருப்பமான தொகுதிகள் என



அனைத்திலுமே திமுக–வுடன் போராட்டம் நடத்தியது காங்கிரஸ்.

இதற்கிடையே, தவெக தரப்புடனும் ராகுலுக்கு நெருக்கமான பிரவீன் சக்கரவர்த்தி போன்றவர்கள் தனியாகப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இருந்த போதும் கடைசி நேரத்தில் ப.சிதம்பரத்தை உள்ளே கொண்டு வந்து இழுபறிக்கு முற்றுப் புள்ளி வைத்தது திமுக. காங்கிரஸுக்கு 28 தொகுதிகள் ஒரு ராஜ்யசபா சீட் என ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஆனால், குறைந்தபட்சம் 35 தொகுதிகளை எதிர்பார்த்த ராகுலுக்கு இந்த உடன்படிக்கையில் துளியும் உடன்பாடு இல்லை இது தொடர்பாக செல்வப் பெருந்தகையை டெல்லிக்கே அழைத்து கடிந்து கொண்ட ராகுல், அவரிடம் ராஜினாமா கடிதத்தை எழுதி வாங்கிவிட்டதாகவும் சொல்லப்பட்டது. இதன் காரணமாகவே, “தேர்தல் முடிந்ததும் மாநிலத் தலைவர் பதவியிலிருந்து விலகிவிடுவேன்” என செல்வப்பெருந்தகை அறிவித்தாகக் கூறப்படுகிறது.

திமுக–வுக்கும் காங்கிரஸுக்கும் இடையில் நடக்கும் இத்தகைய மோதல் போக்கால் தான், ஸ்டாலினும் ராகுல் காந்தியும் இணைந்து பிரச்சாரம் செய்வது தள்ளிக்கொண்டே போனது. இத்தகையச் சூழலில் இன்று தமிழகம் வரும் ராகுல் காந்தி தனியாகப் பிரச்சாரம் செய்வார் என அறிவிக்கப்ப ட்டிருப்பது கூட்டணிக்குள் அதிர்வலைகளைக் கிளப்பியுள்ளது.

, “செல்வப்பெருந்தகை மீது ராகுல் காந்தி கடும் அதிருப்தியில் உள்ளார். அதனால் தான் அவர் தமிழக பிரச்சாரத்திற்கு வர விருப்பம் காட்டவில்லை. முன்னதாக ஏப்ரல் 6–ம் தேதி புதுச்சேரியில் ராகுல் பிரச்சாரம் செய்த அதே நாளில் முதல்வர் ஸ்டாலினும் அங்கு பிரச்சாரம் மேற்கொண்டார்.

இருவரும் ஒரே மேடையில் பேசுவதற்கான ஏற்பாடுகளை திமுக தரப்பு முன்னெடுத்தது. ஆனால், ராகுல் அதை திட்டமிட்டு தவிர்த்துவிட்டார். அதேபோல் அன்றைய தினம் காலையில் சென்னை விமான நிலையம் வந்த ராகுல் காந்தியை வரவேற்க வர வேண்டாம் எனவும் செல்வப்பெருந்தகைக்கு முன்கூட்டியே அறிவுறுத்தப்பட்டது.

விஜய்யின் வருகையால் சிறுபான்மையினர் வாக்குகள் திசைமாறி விடுமோ எனப் பதறும் திமுக, அந்த வாக்குகளைத் தக்கவைக்க ராகுல் காந்தியின் பிரச்சாரம் மிக அவசியம் என நம்பியது.

இதனால் சென்னை, கோவை, திருச்சி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஏதாவது ஒரு இடத்திலாவது ராகுல் – ஸ்டாலின் கூட்டுப் பிரச்சாரம் நடக்க வேண்டும் என விரும்பியது திமுக. இரண்டு கட்சிகளின் நிர்வாகிகளும் இவர்களது கூட்டுப் பிரச்சாரத்தை விரும்பினர். ஆனால், தொடர்ந்து பேசப்பட்டும் ராகுல் இதற்கு தயாராக இல்லை.

இதற்கிடையில், தமிழக மகளிர் காங்கிரஸ் மாநிலத் தலைவர் ஹசினா சையத்,”வேட்பாளர் தேர்வில் செல்வப்பெருந்தகையும் கார்கேயும் பணம் பெற்றுக்கொண்டு சீட் கொடுத்திருக்கிறார்கள்” என புகார் கிளப்பி பதவி விலகியதும் ராகுலை மேலும் கோபப்படுத்தியது. இதனிடையே, “கூடுதல் தொகுதிகளைக் கொடுக்காமல் ராகுல் காந்தி பிரச்சாரத்துக்கு வருவார் என எதிர்பார்க்க முடியாது” என பிரவீன் சக்கரவர்த்தி பேட்டியளித்து பிரச்சினையை பெரிதாக்கினார்.

இந்த நிலையில், ‘காங்கிரஸ் வேட்பாளர்கள் நிற்கும் தொகுதிகளிலாவது பிரச்சாரம் செய்ய வேண்டும்’ என்ற தமிழக காங்கிரஸ் தலைவர்களின் கோரிக்கையை ஏற்று இன்று ராகுல் தமிழகம் வருகிறார். இன்று காலை பொன்னேரியிலும் மதியம் சோளிங்கரிலும் மாலை துறையூர் தொகுதியிலும் நடக்கும் பொதுக்கூட்டங்களில் ராகுல் காந்தி கலந்து கொண்டு வாக்குச் சேகரிக்கிறார். என்றாலும் ராகுலும் ஸ்டாலினும் ஒரு இடத்தில் கூட கூட்டாக பிரச்சாரம் செய்யாதது இரண்டு கட்சி தொண்டர்களையும் கவலையடையச் செய்திருக்கிறது” என்றனர்.

## நான் ரீல் பிக் பாஸ் அல்ல; ரியல் பிக் பாஸ் - சீமான் பேச்சு!

சென்னை, ஏப். 18–



பல்லாவரத்தில் பொதுக்கூ ட்டத்தில் சீமான் பேசியதாவது:– தலைநகரை 60 ஆண்டு காலம் ஆண்ட திமுக, அதிமுக நம் நாட்டை அழி வு பாதைக்கு கொண்டு சென்று விட்டனர்.

நாம் தமிழர் கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் நெகிழியை ஒழித்து விடுவோம்.

கல்வி மற்றும் தரமான மருத்துவம் இரண்டையும் இலவசமாக தருவேன், மற்ற எதையும் என்னிடம் இலவசமாக எதிர்பா ர்க்காதீர்கள், வேண்டு மெ ன்றால் அவர்களுக்கு வாக்க ளித்துக் கொள்ளு ங்கள். அனைத்து தெருக்களிலும் சிசிடிவி கேமரா; குப்பை வீசிவிட்டு போக முடியாது.நான் ரீல் பிக் பாஸ் அல்ல; ரியல் பிக் பாஸ் என்றார்.

2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக, மீண்டும் களம் காணும் மருத்துவர் மா.மதிவேந்தன் இராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் பழைய பேரூந்து நிலையம் அருகில் உள்ள “ஜாமிஆ மஸ்ஜித்” பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த இசுலாமிய சகோதரர்களிடம், தங்களின் முழு ஆதரவை உதயசூரியன் சின்னத்திற்கு அளித்து, வெற்றிபெறச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். நகர கழக செயலாளர் அண்ணன் திரு. NR. சங்கர் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.







மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் பல்லடம் தொகுதியில் போட்டியிடும் செல்வராஜ் எம்எல்ஏ அவர்கள் ஆண்டிபாளையம் பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் அப்போது அவருக்கு ஆள் உயர மாலை அணிவிக்கப்பட்டு கரகாட்டம் ஒயிலாட்டம் ஆடியும் தப்பாட்டம் இசைத்தும் வேட்பாளரை உற்சாகமாக வரவேத்தனர். உடன் திருப்பூர் மாநகராட்சியின் 4–வது மண்டல தலைவரும் கிழக்கு மாவட்ட செயலாளர் இல பத்மநாதன், பகுதி செயலாளர் வைஸ் முருகசாமி. பகுதி கழகத்திற்கு உட்பட்ட கவுன்சிலர்கள் சாந்தாமணி முருகசாமி.சுபத்தரதேவி ஆனந்தன். சாந்தி அய்யா சாமி.பகுதி கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் திருமுருகன்.துணை செயலாளர்கள் ராயப்பராஜ்.சின்னசாமி.செல்விசாமிநாதன்.பொருளாளர் கதிரவன். பிரதிநிதிகள் காளியப்பன்.சண்முகசுந்தரம்.ரமேஷ்.மயில்சாமி.மாரிமுத்து.பகுதி கழகத்திற்கு உட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள் கேசவன்.தண்டபாணி முத்துக்குமாரசாமி. சசிகுமார். சீனிவாசன். ஆனந்தன். விவேகானந்தன்.பாண்டி.மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கலைசெல்வி.மாநகர மகளிர் அமைப்பாளர் விஜயா.இளைஞர் அணி துணை அமைப்பாளர் தமிழரசு. பகுதி வர்த்தக அணி அமைப்பாளர் தம்பி சாமிநாதன்.மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் திமுக தலைமையிலான கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.




மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஈரோடு மேற்கு தொகுதியில் போட்டியிடும் வெல்லும் கழக வேட்பாளர் அமைச்சர் சு முத்துசாமி சென்னிமலை ஒன்றியத்தில் உள்ள கிறிஸ்துவ தேவாலயத்திற்கு சென்று கிறிஸ்துவ மக்களிடம் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் பங்குத்தந்தை ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சு முத்துசாமி வெற்றி பெற வேண்டி பிரார்த்தனை செய்தார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மீனா ஜெயக்குமார், சென்னிமலை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ப. செங்கோட்டையன் சென்னிமலை ஊராட்சி ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ, குமாரபாளையம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் இளங்கோ உள்ளிட்ட ஏராளமான கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



குழந்தைக்குப் பெயர் சூட்டி வாக்கு சேகரித்த பாஜக வேட்பாளர். புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதி பாஜக வேட்பாளர் உதயகுமார் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் குன்னன் டார்கோயில் ஒன்றியத்திற்கு உட்பட்ட வைத்தி கோவில் ஆரணி பட்டி புது தெரு உள்ளிட்ட பகுதிகளில் தாமரை சின்னத்திற்கு வாக்கு சேகரித்த வேட்பாளர் உதயகுமார் கை குழந்தைக்கு தனது பெயரான உதயகுமார் என்ற பெயரைச் சூட்டி நெகிழ்ச்சியை ஏற்படுத்தியதுடன் தாமரை சின்னத்திற்கு வாக்குகளை திரட்டினார்.

## மத்திய அமைச்சர் அமித்ஷா சிவகிரியில் ரோடு ஷோ!



ஈரோடு, ஏப். 18–

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஈரோட்டுக்கு ஏப். 19 (நாளை) வருகிறார் . மொடக்குறிச்சி பா.ஜ.க. வேட்பாளர் கிருத்திகா சிவக்குமாரை ஆதரித்து அமித்ஷா ரோடு ஷோவில் கலந்து கொள்கிறார். பின்னர் பா.ஜ.க. வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்கிறார்.

இதற்காக மத்திய அமைச்சர் அமித்ஷா ஈரோடு மாவட்டம் சிவகிரியில் இருந்து 7 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள தாமரை பாளையம் பகுதியில் உள்ள தாமரை மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மைதானத்திற்கு காலை 9:30 மணிக்கு ஹெலிகாப்டரில் வந்து இறங்குகிறார். அங்கே அவருக்காக ஹெலிபேட் அமைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து கார் மூலமாக காலை 10 மணிக்கு சிவகிரி வருகிறார். சிவகிரி அரசு ஆஸ்பத்திரி அருகில் இருந்து அமித்ஷா ரோடு ஷோவை தொடங்குகிறார். அங்கிருந்து சிவகிரி பழைய பஸ் நிலையம் பகுதியில் உள்ள தீரன் சின்னமலை சிலை வரை 700 மீட்டர் தூரம் நடைபெறவுள்ள ரோடு ஷோவில் அமித்ஷா கலந்து கொள்கிறார் . பின்னர் அங்கிருந்து நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு அமித்ஷா கிளம்புகிறார்.

மத்திய அமைச்சர் அமித்ஷா வருகையை முன்னிட்டு சிவகிரியில் இதுவரை இல்லாத அளவுக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ஈரோடு எஸ். பி. கிரண் சுருதி தலைமையில் 500–க்கும் மேற்பட்ட போலீசார் தாமரை பாளையம் டெலிபேட் பகுதியில் இருந்து அமித்ஷா பங்கேற்கும் ரோடு ஷோ பகுதி வரை தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் மத்திய அமைச்சர் அமித்ஷா ஹெலிகாப்டரில் இருந்து காரில் சிவகிரி வரும் தூரம் வரை மெயின் ரோட்டை ஒட்டியுள்ள குடியிருப்புகள் கடை வியாபாரம் செய்பவர்களின் முகவரி மற்றும் ஆதார் அட்டைகளை வாங்கி போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மத்திய அமைச்சர் அமித்ஷா ஹெலிகாப்டரில் வந்து இறங்கும் தாமரை பாளையத்தில் உள்ள தாமரை மெட்ரிக் பள்ளி மைதானம் மற்றும் சிவகிரி செல்லும் பகுதிக்குள் டிரோன்கள், இதர ஆளில்லா வான்வழி விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறி டிரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்விழி விமானங்கள் பறக்க விடும் நபர்கள் மீது நடவடிக்கை கடும் எடுக்கப்படும் என்று ஈரோடு கலெக்டர் கந்தசாமி எச்சரிக்கை விடுத்துள்ளார் . தொடர்ந்து தலைவர்கள் வருகையால் ஈரோடு தேர்தல் களம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

## விவசாயிகள் கடன் தள்ளுபடி முதல் மகப்பேறு உதவித்தொகை உயர்வு வரை.. சசிகலா வெளியிட்ட தேர்தல் அறிக்கை!



சென்னை, ஏப். 18–

அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் சசிகலா சட்டமன்றத் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:–

மகப்பேறு உதவித்தொகை ரூ.18 ஆயிரத்தில் இருந்து ரூ.24 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3,250 ஆக உயர்த்தப்படும். கரும்பு கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு ரூ.4,250 ஆக அதிகரிக்கப்படும். தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் பெற்ற கடன்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்படும். மீனவர்களுக்கான டீசல் மானியம் உயர்த்தப்படும். இலவச மடிக்கணினி திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும். பட்டியலின, பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு செலுத்தப்படும் கல்வி உதவித்தொகை 50 சதவீதமாக உயர்த்தப்படும். அரசு ஊழியர்களுக்கு பலனளிக்க க்கூடிய புதிய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். நகரங்கள் மற்றும் கிராம பகுதிகளில் வசிக்கும் வீடற்ற மக்களுக்கு 5 ஆண்டுகளில் 5 லட்சம் வீடுகள் கட்டித்தரப்படும். முதியோர் உதவி தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்பது உள்ளிட்ட 60 தேர்தல் வாக்குறுதிகள் அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.

## கடலூரில் விஜய் பிரசாரம் ரத்து!



சென்னை, ஏப். 18–

கடலூரில் தவெக தலைவர் விஜய் ஏப் 19 (நாளை) மேற்கொள்ள இருந்த பிரசாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது. கடலூரில் மஞ்சை நகர் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடத்திக்கொள்ள போலீசார் அனுமதி அளித்தனர். எனினும், ரோடு ஷோவுக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் விஜய்யின் பிரசாரம் ரத்து செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறது.

எற்கனவே விஜய்யின் கடலூர் பிரசாரம் இருமுறை ரத்து செய்யப்பட்ட நிலையில், மூன்றாவது முறையாக ரத்தாகியுள்ளது. இதனால் தவெகவினர் ஏமாற்றம் அடைந்துள்ளனர். விஜய் நாளை திருச்சி கிழக்கு தொகுதியில் பிரசாரம் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் 20 ஆம் தேதி பெரம்பூர் தொகுதியில் பிரசாரம் செய்ய இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. 21 ஆம் தேதி நந்தனத்தில் தவெக செயல்வீரர்கள் கூட்டத்தில் விஜய் பங்கேற்று கட்சியினருக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்க முடிவு செய்து இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020